1980 ஜூலை 21],

அது சரியான வகையிலே இயங்குகின்ற வகையிலே உத்தரவு போட்டாகி விட்டது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப்பிரச்னை.

பாசனத் துறை அமைச்சர் மீது (தீர்ப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 247-வது விதியின் கீழ், 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் நாள் அன்று நெல்லிக்குப்பம் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், திரு. துரை முருகன் அவர்களும் மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையைப் பேரவையில் எழுப்பினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த பிறகு, எனது தீர்ப்பைப் பின்னர் அறிவிப்பதாகத் தெரிவித்திருந்தேன். சம்பந்தப்பட்ட அவைக் குறிப்புகளைப் பார்த்துவிட்டு இன்று எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் நாள் அன்று பேரவையில் ஒரு துணை வினாவிற்கு விடை அளிக்கையில், மாண்புமிகு அமைச்சரவர்கள் மேற்கு நோக்கிப் பாயும் ஆற்று நீரைப் பங்கிடுவது குறித்துத் தமிழக அரசு அலுவலர்களுக்கும் கேரள அரசு அலுவலர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்ததாகக் குறிப்பிட்டது, கேரள அமைச்சரால் மறுக்கப் பட்டுள்ளபடியால், வேண்டுமென்றே பேரவைக்குத் தவறான தகவல் தரப்பட்டுள்ளது என்றும், எனவே இது அவை உரிமை மீறிய செயல் என்றும் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் திரு. துரைமுருகன் அவர்களும் 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் நாள் அன்று அறிவிப்புக் கொடுத்துப் பேரவையில் உரிமை மீறல் பிரச்சனையை எழுப்பினார்கள். இதற்கு விரிவாக விளக்கம் அளித்த மாண்புமிகு பாசனத்துறை அமைச்சர் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"புதிதாக நாங்கள் ஆட்சிக்கு இப்போது வந்த பிறகு 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் தேதி பதவி ஏற்பு நடந்ததற்குப் பிறகு இரண்டு கட்டத்திலே இது குறித்துப் பேச்சு

வார்த்தைகள் நடந்தது என்று நான் இந்த அவையில் குறிப்பிட்டிருக்கிறேன். அவைக் குறிப்பிலேயும் இருக்கிறது. திரும்பவும் அதை நான் உறுதி செய்கிறேன் ''.

மேலும் அவர் கூறியது—'' ஜூன் மாதமே சென்ட்ரல் வாட்டர் கமிஷனுடைய முயற்சிகளின் பேரில் அதிகாரிகள் அங்கே கலந்து முதலாவது கட்ட பேச்சுவார்த்தையை அகில இந்திய அளவிலே கிடைக்கக் கூடிய உபரி நீரைப் பங்கிடுவது பற்றிப் பேசி, இரண்டாவது நாள், ஒரு நாள் முழுவதும், மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைப் பற்றிப் பேசி அதற்குப் பிறகு முடிவு எடுத்திருக்கிறார்கள் ''.............. ''அங்கே பேசிய அமைச்சர் கருத்தை மறுத்து அல்லது விரோதமான கருத்தைச் சொல்வது நம்முடைய நலனுக்கு உகந்தது அல்ல என்ற காரணத்தால், அன்றைக்குப் பல்வேறு கேள்விகளைக் கேட்ட போதும் கூடச்சொன்னேன்—தயவு செய்து அதற்குள் ஆழமாகப் போகவேண்டாம் ''.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ''இரண்டு மாநில அதிகாரிகள் மட்டத்தில் கூட்டங்கள், டிஸ்கஷன் நடந்திருப்பதாகக் கூறுவது வேறு '' என்று குறிப்பிட்டு, பின் '' நானும் புரொசீடிங்சைப் பார்த்தேன். இரண்டு மீட்டிங்குகள் நடந்திருக்கின்றன. ஆல் இந்தியா லெவலில் என்று சொன்னார். அதோடு விட்டு விடலாம் '' என்று திரு. கிருஷ்ணமூர்த்தி மறு முறையும் கூறியுள்ளார்.

அமைச்சர் அவர்கள் உரிமைப் பிரச்சினைக்குப் பதிலளிக்கையில் கடைசியாகப் பின்வருமாறு கூறியுள்ளார்—''திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திரும்பவும் பேசும்போது தனியாகப் பேசினார்கள் என்பது போல் சொல்லியிருக்கிறார்கள். அதையும் குறிப்பேட்டிலே பார்க்க வேண்டும். பொதுப்படையாக அதிகாரிகள் மட்டத்திலே பேச்சு வார்த்தைகள் நடந்திருக்கிறது என்று சொல்லி, அது குறிப்பேட்டிலும் வந்திருக்கிறது. அதையும் தாங்கள் பார்த்துக் கொண்டு தீர்ப்பளிக்க வேண்டுமென்று தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன் '' என்று சொல்லி இருக்கிறார்.

அதற்குத் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ''நான் முன் கூறியவாறு அதாவது, நானும் புரோசீடிங்ஸ் பார்த்தேன். இரண்டு மீட்டிங்குகள் நடந்திருக்கின்றன. ஆல் இந்தியா லெவலிலே என்று சொன்னார்கள் அதோடு விட்டு விடுவோம் '' என்று கூறியுள்ளார்கள். எனவே, இப்பொருள் பற்றித் தொடர்ந்து பல்வேறு மட்டங்களில் பல்வேறு சமயங்களில் தொடர்ந்து நடந்து வருகிறது. மேலும் அமைச்சர் பொதுப்படையாக அவைக்கு விவரங்கள் தரவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேதான் இரு மாநிலங்களுக்கிடையே உள்ள ஒரு பிரச்னை

என்றும் பாராமல் அவைக்குத் தகவல் கொடுத்துள்ளார்கள். ஆகவே, தவறான தகவலினால் அவையைத் திசை திருப்பிய தாகக் கூற இயலாது.

எனவே, திரு.வி. கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரு. துரைமுருகன் ஆகியோர் எழுப்பிய பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் உரிமை மீறல் தென்படவில்லை என்று, "no prima facie case has been made out என்று" தீர்ப்பளிக்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

கடலூர் காவல் நிலயைத்தில் இளஞ் சிறுவன் மரணம் அடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தென்னாற்காடு மாவட்டம், கடலூர் பழைய டவுன் போலீஸ் நிலையத்தில் 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் நாள் அன்று 14 வயது வாசு என்னும் சிறுவன் கொல்லப்பட்டதால் அப்பகுதி பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு,

1. திரு. அ. ரகுமான்கான்
2. திரு. மு. அம்பிகாபதி
3. திரு. செ. சிவசாமி
4. திரு. இரெ. இராசமாணிக்கம்
5. திரு. ரா. கிருஷ்ணன்
6. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்
7. திரு. ப. பொன்னுரங்கம்

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன். திரு. அ. ரகுமான்கான்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுபவர்கள் காவல் நிலையத்திலையே மரணம் அடைகிற சம்பவங்கள் தொடர் கதையாக ஆகிக்கொண்டிருக்கிறது. தென் ஆற்காடு மாவட்டம் கடலூர் பழைய நகரில் உள்ள குப்பக்காரத் தெருவைச் சேர்ந்த மணி என்ற மூட்டை தூக்கிப் பிழைக்கும்